2018 ஜூன் 1]

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கடல் சீற்றத்தால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் கடல் சீற்றம் ஏற்பட்டு, கடலோரப் பகுதிகள் எல்லாம் பாதிக்கப்படுவது வழக்கம். அதுபோல, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே அந்தப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. சென்ற வாரத்தில் என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடியபட்டினம் என்ற ஊரில் கடல் சீற்றம் ஏற்பட்டு, 200 அடி கடல் சுவர் உடைந்துவிட்டு, இரண்டு வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 12 வீடுகள் பாதிப்படையும் நிலையில் உள்ளன. இன்னும் கடலோர கிராமங்களாகிய மண்டைக்காடுபுதூர், குறும்பனை, நீரோடி, இணையம், வல்லவிளை, தூத்தூர், இறையுமன்துறை, மார்த்தாண்டம்துறை, புத்தந்துறை இந்தப் பகுதிகள் எல்லாம் முழுவதுமாக பாதிக்கப்படும் அபாயத்தில் இருக்கின்றன. கடல் உள்வாங்கி, கடல் சிற்றம் வருமோ என்ற பயம் இருக்கிறது. அப்படி ஏற்பட்டால் மிகுந்த பாதிப்பு ஏற்படும். மக்கள் மிகுந்த அச்சத்தில் இருக்கிறார்கள். இப்போது அந்த மக்களெல்லாம் வேறு இடங்களில் தங்கியிருக்கின்றார்கள். அவர்கள் பல்வேறு வகைகளில் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டு வருகின்றார்கள். ஆகவே, இந்தக் கடல் சீற்றத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்குரிய போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான ஏற்பாட்டினைச் செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். கடந்த 2, 3 நாட்களாக காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியதன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடியில் கடல் சீற்றம் இருக்கின்றது. கடல் சீற்றத்தின்*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2018 ஜூன் 1

காரணமாக அலைகள் உயரமாக இருக்கின்றன. அந்தக் கடற்கரை பகுதிகளில் இருக்கக்கூடிய வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் ஒரு புள்ளிவிவரத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த கடல் சீற்றம் உருவானவுடனேயே, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய மீன் வளத் துறை சார்பாக மீனவர்களுக்கு புயல் எச்சரிக்கை கொடுக்கப்பட்டு, தற்போது மீன்பிடி தடைகாலமாக இருப்பதனால் மீனவர்கள் யாரும் கடலுக்குள் செல்லவில்லை. ஆகவே, மீனவர்களுக்குரிய புயல் எச்சரிக்கையும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இந்த கடல் சீற்றத்தால் தற்போது எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்று மாவட்ட நிருவாகத்திடமிருந்து நமக்கு ஆய்வறிக்கை கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துகளை உடனடியாக மாவட்ட நிருவாகத்திற்குத் தெரிவித்து, உரிய நடவடிக்கை எடுத்து, பாதிப்பு இருக்கின்ற பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவினைப் பெற்று நிவாரணம் வழங்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் கடல் சீற்றம் குறித்து இங்கே தகவலைத் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் top priority கொடுக்கப்பட்டு வருகின்றது. அடிப்படை கட்டமைப்பு வசதி என்று கூறும்போது அதில் இந்தக் கடல் அரிப்பும் வரும். அதற்காகவே 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை கிட்டத்தட்ட 380 கோடி ரூபாயை அந்த மாவட்டத்திற்கு செலவு செய்திருக்கின்றோம். Green Climate

2018 ஜூன் 1] [திரு. டி. ஜெயக்குமார்]

Fund *என்று ஒன்று இருக்கின்றது. கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்கள் அதிகமான அளவிற்கு கடல் சீற்றத்திற்கு ஆளாகும் என்பதனால்* concrete proposal *ஒன்றை நாம் தயார் செய்து, 1,100 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்மொழிந்து மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது. அதனை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட மாண்புமிகு பிரதமரிடம் வலியுறுத்தியிருக்கின்றார். எனவே, அந்த நிதி வருகின்றபட்சத்தில், 13 மாவட்டங்களுக்கு இந்தப் பிரச்சினை நிச்சயமாக எதிர்காலத்தில் இருக்காது. இருந்தாலும், எந்தெந்த இடங்களில் உடனடியாக கடல் அரிப்பினைத் தடுக்க வேண்டும் என்பதற்காக* top priority *கொடுத்து ஒரு* list *தயார் செய்திருக்கின்றோம். அந்த* top priority list-*ல் நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தை மட்டும்* special *ஆக எடுத்து, அதற்கு ஒரு* programme *செய்திருக்கின்றோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் அது குறித்தான அறிவிப்பினைச் செய்வார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(இ) மதுக்கடைகள் மீண்டும் திறக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் அவர்கள்.*

திரு. டிடிவி தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்கள் கடந்த 2016 தேர்தல் அறிக்கையில் தமிழக மக்களின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும் ஏற்று தமிழகத்தில் அப்போது இருந்த 6,672 மதுக்கடைகளைப் படிப்படியாகக் குறைப்பேன் என்று தெரிவித்திருந்தார்கள். அதன்படி, ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு முதல் கட்டமாக 500 கடைகளை மூடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். அதைத் தொடர்ந்து தற்போதைய அரசு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் தேதி மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளன்று 500 கடைகளை மூடினார்கள். அதன்பிறகு நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் கிட்டத்தட்ட 3,321 மதுக்கடைகள் மூடப்பட்டன. தற்போது 3,866 கடைகள் இருக்கின்றன என்ற தகவலை நேற்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் தெரிவித்தார்கள். ஆனால், கடந்த*